# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016–2017

### மானியக் கோரிக்கை எண். 48

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**

போக்குவரத்துத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2016

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு | 3 |
| 3 | அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள் (Units) | 6 |
| 4 | அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் | 10 |
| 5 | அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள் | 11 |
| 6 | சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 13 |
| 7 | பொதுமக்கள் சேவைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் | 17 |
| 8 | பயணக் கட்டணச் சலுகை | 22 |
| 9 | வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள் | 28 |
| 10 | சுகாதாரமான குடிநீர் வழங்குதல்—அம்மா குடிநீர் திட்டம் | 30 |
| 11 | புதிய பணிமனைகள் | 31 |
| 12 | தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்யும் திட்டம் | 31 |

| | | |
|---|---|---|
| 13 | பணியாளர்களின் நலத்திட்டங்கள் | 32 |
| 14 | ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் | 36 |
| 15 | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | 38 |
| 16 | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் | 61 |
| 17 | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, சென்னை | 63 |
| 18 | சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை | 65 |
| 19 | மோட்டார் வாகன பராமரிப்புத் துறை | 75 |
| 20 | சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம் (CUMTA) | 76 |
| 21 | மோனோ இரயில் திட்டம் | 77 |
| 22 | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 78 |
| 23 | விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் | 79 |
| 24 | முடிவுரை | 80 |

## போக்குவரத்துத் துறை

### 1. முன்னுரை:

மக்களையும் பொருள்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதே போக்குவரத்து எனப்படும். நாகரிக மேம்பாட்டிற்கு மிகவும் முக்கியமான வணிகம் சிறப்பாகச் செயல்பட, போக்குவரத்து இன்றியமையாததாகும். 1900–ஆம் ஆண்டுகளில் இயந்திரச் சாதனங்கள் மற்றும் தானியங்கிகளில் ஏற்பட்ட வளர்ச்சியினைத் தொடர்ந்து, சாலைப் போக்குவரத்து போட்டி நிறைந்ததாகவும் இயந்திரமயமானதாகவும் உருவானதால், பல்வேறு தனியார் போக்குவரத்துகளும் உருவாகத் தொடங்கின. 1990–ஆம் ஆண்டுகளில் பொருளாதாரத் தாராளமயமாக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மேம்பட்ட உள்கட்டமைப்புகள் விரைந்து முன்னேற்றம் அடைந்ததோடு, பலவிதமான போக்குவரத்து முறைகளும் மிகப்பெரும் வளர்ச்சியடைந்தன.

ஒரு சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு என்பது, பயன்படுத்துவதற்கு எளிதானதாகவும், விரைவானதாகவும், பாதுகாப்பானதாகவும், எல்லோருக்கும் இயலுமளவு செலவினம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். சமுதாயக்



கண்ணோட்டத்தில், பொதுப் போக்குவரத்து என்பது, ஏழைகளுக்கான ஒரு போக்குவரத்து வசதியாகும். ஒரு நாடு அல்லது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிப்பதைப் பல்வேறு ஆய்வுகளும், ஆராய்ச்சிக் குழுக்களும் சுட்டிக் காட்டியுள்ளன.

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் மிகச்சிறந்த போக்குவரத்து வசதியை தமிழ்நாடு பெற்றுள்ளது. மாநிலத்தின் உள்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்குப் பொதுத்துறைகளின் ஒத்துழைப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில், ஒரு உறுதியான முடிவினை எடுத்த முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உள்ளது. தமிழ்நாட்டில், 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 20,839 பேருந்துகளுடன் நாளொன்றுக்கு 1.79 கோடிக்கும் மேற்பட்ட பயணிகளைச் சுமந்து 94.02 இலட்சம் கி.மீ. தூரத்திற்குப் பேருந்துகளை இயக்குகின்றன.

நாட்டின் பிற மாநிலங்களைவிடக் குறைவான பேருந்துக் கட்டணம் வசூலிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. பயணிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து, தாழ்தளப் பேருந்து, சொகுசுப் பேருந்து, அதிசொகுசுப் பேருந்து மற்றும்

குளிர்சாதனப் பேருந்து போன்ற பலதரப்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பொதுப் போக்குவரத்து வசதியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், இருசக்கர வாகனங்கள் மற்றும் மகிழுந்துகள் போன்ற தனிநபர் போக்குவரத்து வாகனங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கும், சென்னை மாநகரத்தின் சுற்றுப்புறங்களில் புதிதாக வளர்ந்துவரும் பகுதிகளை இணைப்பதற்கும் சிற்றுந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பேருந்துகள் முறையாகப் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், 37 பணிமனைகள் புதியதாக அண்மையில் திறக்கப்பட்டதால் மாநிலம் முழுவதிலும் உள்ள பணிமனைகளின் எண்ணிக்கை 319 ஆக உயர்ந்துள்ளது.

## 2. போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு:

போக்குவரத்துத் துறையில் அரசு முதன்மைச் செயலாளரின் தலைமையின் கீழ், 2 துணைச் செயலாளர்கள், 4 சார்புச் செயலாளர்கள் மற்றும் 59 நிர்வாகப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும், தமிழ்நாடு



போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகவும், போக்குவரத்துத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் செயல்படுகிறார்.

போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் அமைப்புகளும் செயல்படுகின்றன.

(i) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.
(ii) சாலைப் போக்குவரத்து நிறுவனம்.
(iii) பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு.
(iv) தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை.

தமிழகத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உள் மற்றும் வெளி மாநிலங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்கி வருகின்றன:–

(i) மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

(ii) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.

(iii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.

(iv) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

(v) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.

(vi) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.

(vii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

(viii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி.

**அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் :**

தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் **31.03.2016** அன்றுள்ளவாறு, **2,239** உபரிப் பேருந்துகள் உட்பட, **23,078** பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**31** மார்ச் **2016** வரையில், வரையறுக்கப்பட்ட இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை **20,839** ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களுடைய இயக்க எல்லையினை கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கும், மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரிக்கும் விரிவுபடுத்தியுள்ளன. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும், நாளொன்றுக்குச் சராசரியாக **94.02** இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துகளை இயக்குகின்றன. **31.03.2016** அன்றுள்ளவாறு, அனைத்துப் போக்குவரத்துக்



கழகங்களிலும் பணியாற்றும் பதிலிப் பணியாளர்களையும் சேர்த்து மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை **1,48,411** ஆகும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், செயல்பாட்டுத் திறன் குறியீடுகள் சாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளன. மார்ச் **2011–ல்**, ஒரு லிட்டருக்கு **5.25** கிலோ மீட்டராக இருந்த எரிபொருள் இயக்கத்திறன், மார்ச் **2016–ல்**, ஒரு லிட்டருக்கு **5.29** கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.

## 3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள் (Units):

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பின்வரும் அலகுகளைக் கொண்டுள்ளன.

| பணிமனைகள் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) | இயந்திர மறுசீரமைப்பு மற்றும் தொழிற்கூடங்கள் | பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் | உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள் | பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள் |
|---|---|---|---|---|
| 319 | 21 | 23 | 18 | 44 |

### 3.1 பேருந்துக் கட்டணம்:

தமிழ்நாட்டில், பேருந்துக் கட்டணங்கள் **18.11.2011** முதல் திருத்தியமைக்கப்பட்டன. அண்டை மாநிலங்கள் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்களை உயர்த்தினாலும், பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாக இவ்வரசு பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவில்லை. பிற மாநிலங்களின் பேருந்துக் கட்டணங்களுடன் ஒப்பீட்டு அட்டவணை பின்வருமாறு :

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதா–ரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் | வால்வோ குளிர் சாதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 18.11.2011 | 42 | 56 | 60 | 70 | 90 | 110 |
| ஆந்திரா | 24.10.2015 | 62 | 87 | 116 | 116 | 171 | 265 |
| கேரளா | 20.05.2014 | 64 | 68 | 77 | 110 | 110 | 130 |
| கர்நாடகம் | 10.01.2015 | 59 | 90 | 112 | 131 | 177 | 190 |

### 3.2 அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் வழங்கப்படும் பேருந்துச் சேவைகள்:

**31.03.2016** அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால், பயணிகளின் நலனுக்காக இயக்கப்படும்



பேருந்துகளின் எண்ணிக்கையின் விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| சென்னை மாநகர் – நகரப் பேருந்துகள் | 3,685 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 6,930 |
| புறநகர்ப் பேருந்துகள் | 8,612 |
| மலைப்பகுதி பேருந்துகள் | 529 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 664 |
| வெளிமாநிலங்களுக்கு | 419 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 20,839 |
| உபரிப் பேருந்துகள் | 2,239 |
| மொத்தப் பேருந்துகள் | 23,078 |

### 3.3 செயல்பாட்டுத்திறன் குறியீடுகள் :

**2011–12** முதல் **2015–16** வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டுத்திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு :

| பொருள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,207 | 22,053 | 22,501 | 22,474 | 23078 |
| இயக்கப்படும் பேருந்துகள் | 19,507 | 20,500 | 20,684 | 20,684 | 20839 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 88.44 | 89.78 | 91.20 | 90.21 | 94.02 |
| பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 | 0.01 | 0.004 | 0.004 |
| விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.22 | 0.20 | 0.20 | 0.18 | 0.18 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1237 | 1233 | 1187 | 1165 | 1258 |

| பொருள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1397 | 1382 | 1318 | 1331 | 1460 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.27 | 5.26 | 5.30 | 5.29 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.65 | 1.80 | 1.82 | 1.92 | 2.01 |
| இயக்க வேண்டிய ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் விகிதம் (தொழிற்கூடப் பணியாளர்கள் உட்பட) | 6.40 | 6.31 | 6.43 | 6.48 | 6.52 |

## 3.4 இயக்கச் செலவு :

ஒவ்வொரு வருடமும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவு மற்றும் டீசல் விலை உயர்வினால் ஏற்படும் இயக்கச் செலவுகள் அதிகரிக்கின்றன. 2015–16–ஆம் ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரம் சதவீதத்தில் கீழ்வருமாறு:-

| வ. எண் | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1 | சம்பளம் | 51.4% |
| 2 | டீசல் | 28.3% |
| 3 | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 4.1% |
| 4 | தேய்மானம் | 2.6% |
| 5 | மோட்டார் வாகன விபத்து இழப்பீடு, சுங்கச்சாவடிக் கட்டணம் மற்றும் பிற இனங்கள் | 6.2% |
| 6 | வட்டி | 5.6% |
| 7 | வரிகள் | 1.8% |
| | மொத்தம் | 100% |



## 4. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் :

மத்திய அரசு தொடர்ந்து டீசல் விலையை உயர்த்தி வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவு ஏற்படுகின்றது. இருப்பினும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் தொடர்ந்து வருவாயில் வளர்ச்சி அடைந்துள்ளன. அரசுப் பேருந்துகளின் கட்டண வசூல், விளம்பரங்கள், குடிநீர் விற்பனை, விரைவுத் தூதஞ்சல் சேவை, வாடகைக் கட்டணங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற இனங்கள் வாயிலாகக் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஈட்டிய வருவாய் விவரங்கள் பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்) / நாள் ஒன்றுக்கு

| ஆண்டு | நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல் | இதர வருவாய் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2011–12 | 18.75 | 2.64 | 21.39 |
| 2012–13 | 19.87 | 3.01 | 22.88 |
| 2013–14 | 20.12 | 4.59 | 24.71 |
| 2014–15 | 20.50 | 4.41 | 24.91 |
| 2015–16 (துணிக்கைக்கு முன்) | 20.73 | 3.34 | 24.07 |

## 5. அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்:

அரசு, கடந்த 5 ஆண்டுகளில் **(2011–2016),** பங்கு மூலதன உதவி (Share Capital Assistance), கடன் (Loan), வழிவகை முன்பணம் (Ways & Means Advance), மானியங்கள் (Subsidies) மற்றும் செலவினத்தை ஈடு செய்தல் (Reimbursement) ஆகிய வகைகளில் **ரூ.6,348.52** கோடியினை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

### 5.1 பங்கு மூலதன உதவி

(ரூபாய் கோடியில்)

| வருடம் | புதிய பேருந்துகள் | பயணச் சீட்டு இய ந்திரங்கள் | புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக்குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011-12 | 155.26 | 7.0275 | - | 162.2875 |
| 2012-13 | 150.00 | 24.6322 | - | 174.6322 |
| 2013-14 | - | - | 350.00 | 350.0000 |
| 2014-15 | 125.00 | - | 228.00 | 353.0000 |
| 2015-16 | - | - | 150.00 | 150.0000 |
| மொத்தம் | 430.26 | 31.6597 | 728.00 | 1189.9197 |



### 5.2 கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | புதிய பேருந்துகள் | பேருந்துகளைப் புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் /ஊக்கத் தொகை/ அகவிலைப் படி நிலுவை | ஓய்வூ பெற்றவர் களின் பணப்பலன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011-12 | 137.5000 | 24.395 | 25.00 | 81.0265 | 178.1415 | - | 446.0630 |
| 2012-13 | _ | _ | 13.91 | _ | _ | - | 13.9100 |
| 2013-14 | _ | 24.395 | _ | _ | _ | - | 24.3950 |
| 2014-15 | 81.6144 | _ | 39.73 | _ | _ | - | 121.3444 |
| 2015-16 | 125.0000 | - | - | - | 360.0000 | 116.00 | 601.0000 |
| மொத்தம் | 344.1144 | 48.790 | 78.64 | 81.0265 | 538.1415 | 116.00 | 1206.7124 |

### 5.3 உதவித் தொகை

(ரூபாய் கோடியில்)

| வருடம் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிப்புரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சர் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011-12 | 20.00 | - | 2.7800 | 22.7800 |
| 2012-13 | 20.00 | 200.00 | 2.7800 | 222.7800 |
| 2013-14 | 20.00 | 500.00 | 1.6004 | 521.6004 |
| 2014-15 | 20.00 | 600.00 | 2.7800 | 622.7800 |
| 2015-16 | 30.00 | 256.72 | 2.7800 | 289.5000 |
| மொத்தம் | 110.00 | 1556.72 | 12.7204 | 1679.4404 |

### 5.4 மாணவர் கட்டணச் சலுகையை ஈடு செய்தல்

**2011–2016–**ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மாணவர் கட்டணச் சலுகையை ஈடுசெய்வதற்காக **ரூ.2,262.97** கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 6. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் :

### 6.1 சாலை விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கைகள்:

தமிழகத்தில் விரைவான நகரமயமாதலின் காரணமாக வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்தாலும், சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன:

(i) வாகனம் ஓட்டும்பொழுது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன.

(ii) பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவியைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனையும் நடத்தப்படுகிறது.

(iii) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(iv) மாநில நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலை வசதியை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கைக் குறியீட்டு அறிவிப்புப் பலகைகளை அடிக்கடி விபத்து



ஏற்படும் பகுதிகளில் நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(v) அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விபத்தின்றிப் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் பெயரால் விருதுகள் வழங்கப் படுகின்றன. இவ்விருதுக்காக, கடந்த 5 ஆண்டுகளில் ரூ.12.7204 கோடி அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

| வருடம் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|
| 2011–12 | 2.7800 |
| 2012–13 | 2.7800 |
| 2013–14 | 1.6004 |
| 2014–15 | 2.7800 |
| 2015–16 | 2.7800 |
| மொத்தம் | 12.7204 |

(vi) தொடர் விபத்துகள் மூலம் உயிரிழப்பு ஏற்படக் காரணமாக இருக்கும் ஓட்டுநர்களைப் பணிநீக்கம் செய்வது என்ற ஒரே மாதிரியான நிலைப்பாட்டினை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் பின்பற்றுகின்றன.

(vii) ஓட்டுநர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் யோகா மற்றும் தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011-12 | 19,507 | 1,237 | 1,397 |
| 2012-13 | 20,500 | 1,233 | 1,382 |
| 2013-14 | 20,684 | 1,187 | 1,318 |
| 2014-15 | 20,684 | 1,165 | 1,331 |
| 2015-16 | 20,839 | 1,258 | 1,460 |

## 6.2 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் பொருட்டு **2010–**ஆம் ஆண்டு விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் என்ற புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.



அதன்படி, **2010–11, 2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆகிய ஆண்டுகளில் அரசின் பங்காக ஆண்டொன்றுக்கு ரூ.**20** கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.**20** கோடியும், ஆகமொத்தம் ரூ.**40** கோடி விபத்து இழப்பீட்டு நிதி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதி **2015–16–**ஆம் ஆண்டு முதல் ரூ.**40** கோடியிலிருந்து ரூ.**60** கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும், போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும் வழங்கப்படுகிறது. மேற்படி நிதி, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் கையாளப்படுகிறது.

## 6.3 மக்கள் நீதிமன்றம்:

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் **1987–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடு வழங்கி வருகின்றன. அதன்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011–12 | 884 | 997.21 |
| 2012–13 | 1,867 | 3, 466.29 |
| 2013–14 | 1,160 | 569.22 |
| 2014–15 | 897 | 1, 028.14 |
| 2015–16 | 479 | 1, 222.62 |
| மொத்தம் | 5,287 | 7,283.48 |

## 7. பொதுமக்கள் சேவைகளை மேம்படுத்த நடவடிக்கைகள்:

### 7.1 இயக்கப் பேருந்துகள்:

கடந்த ஐந்து ஆண்டுகளில், இவ்வரசின் சீரிய நடவடிக்கையால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை **19,110**–லிருந்து **20,839** ஆக உயர்த்தப்பட்டது.

### 7.2 புதிய வழித்தடங்கள் அறிமுகம்:

பயணிகளின் நலன் கருதி, கடந்த ஐந்து ஆண்டுகளில் **1,525** புதிய வழித்தடங்கள் மாநிலம் முழுவதும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.



### 7.3 புதிய பேருந்துகள் அறிமுகம் :

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பயன்படுத்தப்பட இயலாத நிலையிலிருக்கும் பழைய பேருந்துகளைக் கழிவுசெய்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் **7,153** புதிய பேருந்துகள் வாங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், **2011–2016**–ஆம் ஆண்டுகளில், மலை சார்ந்த பகுதிகளுக்கு **208** பேருந்துகளும், **200** சிற்றுந்துகளும் வாங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு | பேருந்துகளின் எண்ணிக்கை | மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை | சிற்றுந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011-12 | 3000 | - | - |
| 2012-13 | 2953 | - | 100 |
| 2013-14 | - | 208 | - |
| **2014–15** | 1200 | - | 100 |
| மொத்தம் | 7153 | 208 | 200 |

## 7.4 சென்னையில் 200 சிற்றுந்துகள் அறிமுகம்:

பயணம் செய்யும் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தில், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள குறுகிய சாலைகளை முதன்மைச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக, 85 வழித்தடங்களில் 200 சிற்றுந்துகள், 10 உபரி சிற்றுந்துகளுடன் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் அறிமுகம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள், மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

## 7.5 மகளிர் சிறப்புப் பேருந்துகள்:

சென்னையில் நெரிசல் நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் இடையூறின்றிப் பயணம் செய்ய, மாநகரப் போக்குவரத்துக் கழகம் 92 வழித்தடங்களில் 250 மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

## 7.6 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்:

மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக முதன் முறையாக, மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் 10 நட்புப் பேருந்துகள் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.



## 7.7 மலைப்பகுதிகளில் சிற்றுந்துகள்:

மலைப்பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியின்றித் தவிக்கும் மக்கள், அருகில் உள்ள நகரங்களுக்குச் சென்று வருவதற்கும், அங்குள்ள மாணவ / மாணவியர் பள்ளி செல்வதற்கும், தொழிலாளர்கள் அருகில் உள்ள நகரங்களுக்கு வேலைக்குச் செல்வதற்கும், நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்வதற்கும் ஏதுவாக, போக்குவரத்துக் கழகங்களின் சுய நிதியிலிருந்து ரூ.35 கோடி செலவில் மலைப்பகுதிகளில் 208 சிற்றுந்துகளை இயக்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில், 62 சிற்றுந்துகள் அப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உதகமண்டலத்தில் 62 சிற்றுந்துகளை இயக்குவதற்கு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

## 7.8 உணவகத்துடன் கூடிய பேருந்து:

சென்னையிலிருந்து திருச்சிக்கு, ஸ்ரீரங்கம் வழியாக உணவகம் மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய இரண்டு பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

### 7.9 விழாக்காலச் சிறப்புப் பேருந்துகள்:

தீபாவளி, பொங்கல் ஆகிய விழாக்காலங்களின் போது, பொதுமக்கள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று, பின்பு பணிபுரியும் இடத்திற்குத் திரும்பி வருவதற்கு வசதியாக, சாதாரணக் கட்டணத்துடன், போதுமான பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாய்களை ஈட்டியுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்துகள் மற்றும் அவற்றின் வருவாய் விவரங்கள் வருமாறு:

| ஆண்டு | பண்டிகை | இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்துகளின் எண்ணிக்கை | ஈட்டிய மொத்த வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2011-12 | பொங்கல் | 6,061 | 80.00 |
| 2012-13 | தீபாவளி<br>பொங்கல் | 7,958<br>7,135 | 87.37<br>89.70 |
| 2013-14 | தீபாவளி<br>பொங்கல் | 10,484<br>9,546 | 86.93<br>93.41 |
| 2014-15 | தீபாவளி<br>பொங்கல் | 10,499<br>8,548 | 83.96<br>81.86 |
| 2015-16 | தீபாவளி<br>பொங்கல் | 15,540<br>7,160 | 83.92<br>90.51 |



## 8. பயணக் கட்டணச் சலுகை:

### 8.1 பயணக் கட்டணச் சலுகை பெறும் பயனாளிகளின் வகைகள்:

- நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்
- மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.
- புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்)
- நாடகக் கலைஞர்கள்
- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்
- மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (21.02.2016 முதல் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்)

**8.2 மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்:**

பள்ளி செல்லும் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில், கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) அரசால் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

**8.2.1 மாணவ / மாணவியருக்கான கட்டணமில்லாப் பயணச் சலுகை:**

(i) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் **1–**ஆம் வகுப்பு முதல் **12–**ஆம் வகுப்பு வரை.

(ii) தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி.

(iii) அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.

(iv) அரசுத் தொழிற்பயிற்சிக்கூடங்கள்.

(v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

மேற்கண்ட சலுகை **2013–14–**ஆம் ஆண்டு முதல் பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.



**1)** சமுதாயக் கல்லூரிகள்.

**2)** அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**3)** இசைக் கல்லூரிகள்.

**4)** சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**8.2.2 50% பயணக் கட்டணச் சலுகை:**

(i) தனியார் கல்லூரிகள்
(ii) தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
(iii) தனியார் பொறியியல் கல்லூரிகள்
} அரசு அங்கீகாரம் பெற்றவை

(iv) சென்னை, அண்ணா பல்கலைக் கழகப் பொறியியல் கலந்தாய்விற்கு வரும் மாணவ, மாணவியர் மற்றும் உடன் வரும் நபர் ஒருவருக்கு.

(v) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்களில் பயிலும் இலங்கை அகதிகள் முகாம்களைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு.

**8.2.3 மாற்று அனுமதிச் சீட்டுகள்:**

சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவ, மாணவியர், தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்று திரும்பிவர **60** மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**8.2.4 அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படும் மாணவ, மாணவியருக்கான பயணச் சலுகை மானியம்:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சிக் கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் அரசால் வழங்கப்பட்ட மானியத்தின் விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | வருடம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | 2011–12 | 438.9700 |
| 2 | 2012–13 | 452.5215 |
| 3 | 2013–14 | 452.9559 |
| 4 | 2014–15 | 448.0000 |
| 5 | 2015–16 | 480.0000 |
| மொத்தம் | | 2272.4474 |

நடப்பு நிதியாண்டு **2016–17** வரவு–செலவுத் திட்டத்தில், மாணவ, மாணவியருக்கான பயணச் சலுகை வழங்கியதற்கு மானியமாக ரூ.**505.35** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**8.3 இணையவழி முன்பதிவு :**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் இணையவழி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை **03.10.2011** முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2015–16–**ஆம் ஆண்டில் மொத்த முன்பதிவில் இணையவழி முன்பதிவு **44.73** சதவீதமாக உயர்ந்துள்ளது. அக்டோபர் **2015–**இல் அதிகபட்சமாக **51.11** சதவீதம் இணையவழி மூலம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

**8.4 விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள்:**

அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்ய, பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளில், கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் **விருப்பம் போல் பயணம் செய்ய** பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன:

(i) ஒரு நாள் பயணச் சீட்டு : ரூ. **50/–**

(ii) வாராந்திரப் பயணச் சீட்டு : ரூ. **300/–**

(iii) மாதாந்திரப் பயணச் சீட்டு : ரூ.**1000/–**

**8.5 மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை:**

தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக, மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது, **2013–14–**ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**8.6 குழுப் பயணச் சீட்டில் சலுகை:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் **10** அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும்போது பயணக்கட்டணத்தில் **10** சதவீதம் கட்டணக் கழிவுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகையின் மூலம் **11,292** குழுப் பயணச்சீட்டுகள் இதுவரையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. **2015–16–**ஆம் ஆண்டில் **1,45,161** நபர்கள் ரூ.**42.78** இலட்சத்திற்கு சலுகை பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

**8.7 மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள்:**

GPS தொழில்நுட்ப மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம், பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் பெரிதும் உதவியாக



உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்கச் செயல்பாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், முறையான கணக்கீட்டைப் பற்றி அறியவும் பெரிதும் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் **17,451 (28.06.2016** வரை) மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதற்காக ரூ.**31.66** கோடி அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**9. வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்:**

**9.1 கழிவுசெய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஏலமிட, மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி–(M/s. MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த நான்காண்டுகளில் **3,631** பேருந்துகளைக் கழிவு செய்ததில் **(31.03.2016** வரை) போக்குவரத்துக் கழகங்கள் ரூ.**51.06** கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

### 9.2 விளம்பரங்கள் மூலம் வருவாய்:

போக்குவரத்துக் கழகங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் விளம்பரங்கள் மூலமாக ரூ.71.50 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

### 9.3 பயணவழி உணவகங்கள்:

பயணிகளுக்குச் சிறப்பான வசதி அளிக்கும் பொருட்டு, 34 இடங்களில் உள்ள பயணவழி உணவகங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இடவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிடவசதி போன்றவை மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம், கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ரூ.16.97 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

### 9.4 சிப்பஞ்சல் மற்றும் விரைவுத்தூதஞ்சல் சேவை:

அரசுப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel Services) மற்றும் விரைவுத்தூதஞ்சல் (Courier Services) சேவைகள் மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.191.91 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.



## 10. சுகாதாரமான குடிநீர் வழங்குதல் – அம்மா குடிநீர் திட்டம் I :

அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.09.2013 அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கும்மிடிப்பூண்டி வளாகத்தில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நிறுவப்பட்டு பொது மக்கள் மற்றும் பயணிகளுக்குச் சுத்தமான குடிநீர் மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் 306 மையங்களில், அம்மா குடிநீர் மிகக்குறைந்த விலையில் ஒரு பாட்டில் ரூ.10–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டம் மக்களிடமும், பயணிகளிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### அம்மா குடிநீர்த் திட்டம்–II

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 23.10.2013 அன்று கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் அதிகளவு நிலத்தடி நீர் கிடைப்பதைக் கருத்திற்கொண்டு, மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை மூலம், தினசரி 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம்–II

அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**11. புதிய பணிமனைகள் :**

பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்பப் பணிமனைகளின் எண்ணிக்கையை உயர்த்துமாறு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, 74 புதிய பணிமனைகளை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டதில், 36 பணிமனைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுவிட்டன. மேலும், 11 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள பணிமனைகளின் கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31.03.2016 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளின் எண்ணிக்கை 319 ஆகும்.

**12. தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டம்:**

தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் பணியாளர்களின் பெயர் பட்டியல் மாநகர் போக்குவரத்துக் கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுவரையில்,



16,888 போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் இரத்ததானம் செய்வதற்குத் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

**13. பணியாளர்களின் நலத்திட்டங்கள்:**

**13.1 காலிப் பணியிடங்களை நிரப்புதல்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் காலிப் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட்டுள்ளன.

| சேம ஓட்டுநர் | சேம நடத்துநர் | தொழில்நுட்பம் | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | மொத்தப் பணி நியமனம் |
|---|---|---|---|---|
| **15,483** | **15,157** | **4,781** | 1,203 | **36,624** |

**13.2 அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பணி வரன்முறை செய்தல்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், தினக்கூலி அடிப்படையில் பணி செய்தவர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு :-

| ஓட்டுநர் | நடத்துநர் | தொழில் நுட்பம் | மொத்தம் |
|---|---|---|---|
| **13,709** | **14,138** | **3,485** | **31,332** |

**13.3 ஊதிய ஒப்பந்தம்:**

12–ஆவது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை ஏப்ரல் **2015–இல்** முடிவுற்று, **01.09.2013** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பலன்கள், தகுதியுள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

**13.4 முழு உடற்பரிசோதனை:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் **45** வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் **2012–13–ஆம்** ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், **2013–14–ஆம்** ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் **20.07.2016** வரை **54,395** பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**13.5 CT ஸ்கேன் இயந்திரம்:**

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள CT ஸ்கேன் இயந்திரத்தின் மூலம் **31.05.2016** வரையில் **9,477** போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.



**13.6 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு பணப்பயன்கள்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில், போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வுக் கால பணப்பயனாகிய பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு **ரூ.579.57** கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஓய்வூதியப் பணியாளர்களுக்கு சேமநல நிதியாக **ரூ.573.49** கோடி வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு **:**

(ரூ. கோடியில்)

| ஆண்டு | பணிக்கொடை | | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | மொத்தம் | சேமநலநிதி | |
|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. | | | பணியாளர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
| 2011-12 | 1,609 (16.05.2011 முதல் மார்ச் 2012 வரை) | 42.60 | 9.61 | 52.21 | 1,995 | 148.27 |
| 2012-13 | 2,292 | 82.10 | 17.17 | 99.27 | 3,229 | 61.90 |
| 2013-14 | 5,652 | 194.35 | 14.51 | 208.86 | 4,065 | 97.91 |
| 2014-15 | 1,664 | 68.76 | 2.16 | 70.92 | 4,490 | 129.59 |
| 2015-16 | 3,108 | 137.00 | 11.31 | 148.31 | 4,240 | 135.82 |
| மொத்தம் | 14,325 | 524.81 | 54.76 | 579.57 | 18,019 | 573.49 |

**13.7 நலத்திட்டங்கள் :**

தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சீரிய நலன் கருதி, போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:-

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு / ஆய்வுப் பலன்கள்.
2. விடுப்புப் பலன்கள்

3. திருப்பான் படி ( Steering Allowance )

4. கல்வி உதவித்தொகை.

5. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதி.

6. இலவசச் சீருடைகள் மற்றும் சலவைப்படி.

7. திருமணக் கடன்.

8. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.

9. இறுதிச் சடங்குச் செலவுகள்.

10. மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு.

11. குடும்பநல நிதி.

12. விருப்ப ஓய்வூதியத் திட்டம்.

13. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதிகள்.

14. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவதுபோல).

15. பண்டிகை முன்பணம் ரூ. 5000/–.

16. ஓய்வூதியத் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. 31.3.2016 அன்றுள்ளவாறு மொத்தம் 60,279 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.



17. ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, கடந்த ஐந்து ஆண்டுகளில் (31.03.2016 வரை) தரமான அடிப்படை வசதிகளுடன் ஓய்வறைகள் ரூ.395.61 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

18. கடந்த ஐந்து ஆண்டுகளில் (31.03.2016 வரை) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளில் கான்கிரிட் தளம், பேருந்துகளின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை ரூ.24.42 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 14. ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்:

### 14.1 விபத்து நிகழ்வுகளைக் குறைத்தல்:

சர்வதேச தரத்தில் ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு முறையான உள்கட்டமைப்பு, நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கும்மிடிப்பூண்டி வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட பொதுப்பணித்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டத்தால் இம்மையத்தின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 90% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 14.2 ஓட்டுநர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி:

ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் புத்தாக்கப் பயிற்சி மையங்களில் ஓட்டுநர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது. ஓட்டுநர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்கும் வகையில் யோகா மற்றும் தியானப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் விபத்தில்லாப் பயணம் மற்றும் ஓட்டுநரின் உடல் ஆரோக்கியம் பேணப்படும்.

### 14.3 ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி (Stimulator):

உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி மூலம் சென்னை, திருச்சி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு :

| ஆண்டு | பயனடைந்த ஓட்டுநர்கள் |
|---|---|
| 2014–15 | 3,976 |
| 2015–16 | 2,078 |



### 15. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்:

### 15.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் , சென்னை :

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. சென்னை மாநகரில் பேருந்து வசதிகள் அளிப்பதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகம் அதிக பேருந்துகளை இயக்கி வருகின்றது. மேலும், சென்னை மாநகரப் பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- இப்போக்குவரத்துக் கழகம் 32 பணிமனைகளையும், 3987 பேருந்துகளையும் கொண்டு 3685 வரையறுக்கப்பட்ட சேவைகளில் 845 வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது. இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 24,930 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, சொகுசு, தொடர் மற்றும் குளிர்சாதன வால்வோ ஆகிய பல்வேறு பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக்

கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் குரோம்பேட்டையில் அமைந்துள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் பாடியநல்லூர், வேளச்சேரி, கண்ணகி நகர், மகாகவி பாரதி நகர், பெசன்ட் நகர், திருவேற்காடு, ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, பெரம்பூர், குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், தாமரைப்பாக்கம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளை திறக்க அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி, 10 பணிமனைகள் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- 2014–15–ஆம் ஆண்டு போக்குவரத்து மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி,தண்டையார்பேட்டையில் தகுதிச் சான்றுப் பிரிவு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 12.10.2015 அன்று தொடங்கப்பட்டது. மேலும், அயனாவரத்தில் தகுதிச் சான்று பிரிவின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், 445 புதிய பேருந்துகளும், 210 சிற்றுந்துகள் மற்றும் 367 புதிய வழித்தடங்கள் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.



- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2,023 ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் அனைத்து பணிமனைகளிலும் உள்ள நடத்துநர்களால் கையடக்க மின்னணு பயணச் சீட்டுக் கருவிகளை பயன்படுத்தி, பயணிகளுக்கு விரைவாக பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- 250 நெரிசல்நேரப் பேருந்துச் சேவைகளும் மற்றும் 66 இரவு நேர பேருந்து சேவைகளும் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன.
- தினமும் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக 73 வழித்தடங்களில் 250 சிறப்பு பேருந்துகள் சென்னையில் இயக்கப்பட்டு வருகின்றன.
- 200 சிற்றுந்துகள் 85 வழித்தடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, பேருந்து வசதி இல்லாத உட்புறப் பகுதிகள் அருகில் உள்ள போக்குவரத்து மையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, பாலூட்டும் தாய்மார்களுக்காக தனி அறை வசதி 27 மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் வசதி 24.02.2016 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 46,738 பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்திப் பயணிக்கின்றனர்.

### 15.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை:

இப்போக்குவரத்துக் கழகம் நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகம் மாநிலத்திற்கு உள்ளேயும், மாநிலங்களுக்கு இடையேயும், பேருந்துகளை இயங்குகின்றது. மேலும், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய



மாநிலங்களுக்கும் மற்றும் புதுச்சேரிக்கும் தன்னுடைய இயக்க எல்லையை விரிவுபடுத்தியுள்ளது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 22 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 1,249 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,083 ஆகும். இவற்றில் 664 பேருந்துகள் தமிழ்நாட்டிற்குள்ளேயும், 419 பேருந்துகள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரிக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை அம்மா குடிநீர்த் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் உட்பட மொத்தம் 6,860 ஆகும். இக்கழகம் அதிசொகுசு, அதிநவீன சொகுசு, கிளாசிக் மற்றும் குளிர்சாதனம் போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- திண்டுக்கல், காரைக்குடி, திருநெல்வேலி–2 மற்றும் ஒசூர் ஆகிய பணிமனைகள் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 453 புதிய பேருந்துகளும், 54 புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2,522 ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகம், 2014–2015–ஆம் ஆண்டில், பேருந்து உற்பத்தித் திறனில் அதிகபட்ச உயர்வு (Highest Performance in Vehicle Productivity) மற்றும் அதிகபட்ச டீசல் சிக்கனம் (Highest Kilometer per liter) ஆகியவற்றில் முதலிடம் பெற்று அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்து கழகத்தின் பேருந்துக் கூண்டு கட்டும் பிரிவு திருச்சி மற்றும் நாகர்கோவிலில் செயல்பட்டு வருகிறது.



**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- பயணிகளின் வசதிக்காக வலைதளம் மற்றும் செல்லிடப்பேசி வாயிலாக பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை 03.10.2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- வலைதளத்தில் முன்பதிவு செய்யும் முறையின் கீழ் (OTRS) தமிழ்நாடு மற்றும் அருகில் உள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரி ஆகிய பகுதிகளில் 123 முன்பதிவு மையங்களில் 127 பயணச்சீட்டு வழங்கும் இடங்கள் உள்ளன.
- முதியவர்கள், மகளிர் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் வசதிக்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உணவகம் மற்றும் கழிவறையுடன் கூடிய இரண்டு கிளாசிக் பேருந்துகள் சென்னையிலிருந்து திருச்சி வரையிலான வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

- **அம்மா குடிநீர்த் திட்டம்,** அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. **அம்மா குடிநீர்,**

ஒரு லிட்டர் அளவு கொண்ட பாட்டில் ஒன்று ரூபாய் 10/–க்கு, 234 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 306 விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூன்று பணிமனைகளில் பொது சிறுகட்டு வானலை சேவை (GPRS) வசதியைப் பயன்படுத்தி மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவி (ETM) மற்றும் புவி இருப்பிட முறைமை (GPS) மூலம் பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் 2 பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**15.3 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்:**

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் விழுப்புரத்தில் அமைந்துள்ளது.



இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 3680 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,385 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 25,106 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, தாழ்தள, தொடர், சொகுசு மற்றும் குளிர்சாதன வால்வோ பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், நெய்வேலி, ஓரிக்கை–1, ஓரிக்கை–2, சேத்துபட்டு, சின்னசேலம், பேரணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார்கோவில் மற்றும் ஏலாத்தூர் ஆகிய 11 இடங்களில் பணிமனைகள் அமைப்பதற்கு அறிவித்தார்கள். இவற்றில் 8 பணிமனைகள்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 1348 புதிய பேருந்துகளும், 259 புதிய வழித்தடங்களும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2847 ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகம் 2014–2015–ஆம் ஆண்டிற்கான சிறந்த புறநகர் பேருந்து உற்பத்திதிறன் முன்னேற்றத்திற்கான முதலிடத்தைப் பெற்று அனைத்து மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துக் கூண்டு கட்டும் பிரிவுகள் பண்ருட்டி, வேலூர் மற்றும் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகின்றன.



**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- 1 முதல் 1 நிலை, 1 முதல் 3 நிலைகள், 1 முதல் 5 நிலைகள் மற்றும் 1 முதல் 6 நிலைகள் கொண்ட சிறப்பு சொகுசு பேருந்துகள் தொலைதூரப் பயணிகளுக்குப் பயனளிக்கும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன.

- நகரப் பகுதிகளில் இயக்கப்படும் விரைவுப் பேருந்துகளில் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய சொகுசான இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- சிறப்புப் பேருந்துகள் சென்னை–திருவண்ணாமலை (பௌர்ணமி நாட்களில்) மற்றும் சென்னை–மேல்மலையனூர் (அமாவாசை நாட்களில்) வழித்தடங்களில் சென்னையிலிருந்து புறப்படும் பேருந்துகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டு பயணிகளுக்குப் பயனளிக்கும் வகையில் இயக்கப்படுகின்றன.

**15.4 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் :**

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் சேலத்தில் அமைந்துள்ளது.

இக்கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணித்து மேம்படுத்த, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதி பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 2,307 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,061 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 13,760 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தம்மம்பட்டி, ஓமலூர் மற்றும் பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் மூன்று புதிய பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டன.

- பேருந்தினைக் கழுவிச் சுத்தம் செய்யும் 15 இயந்திரங்கள் பணிமனை வளாகங்களில் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன.



- மலைப்பகுதிகளில் இயங்கிவந்த 6 வருடங்களுக்கு மேலான 17 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய குறுநீளச்சட்டப் பேருந்துகள் சேலம் (ஏற்காடு) மற்றும் நாமக்கல் (கொல்லிமலை) பகுதிகளில் இயக்கப்பட்டு வருகின்றன.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 88 புதிய வழித்தடங்களில் 152 புதிய வழித்தடச் சேவைகளையும், 755 புதிய பேருந்துகளையும் தொடங்கி வைத்துள்ளார்கள்.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2,093 ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகம் 2015–2016–ஆம் ஆண்டில் கீழ்காணும் திறன்களில் சாதனை படைத்ததற்கான விருதுகளை அனைத்து மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.

(1) முதல் இடம் – நகர வழித்தடங்களில் அதிகப்படியான டீசல் KMPL முன்னேற்றம்.

(2) முதல் இடம் – புறநகர் வழித்தடங்களில் உருளிப்பட்டை (Tyre) அதிகப்படியான செயல் திறன்.

(3) முதல் இடம் – புறநகர் வழித்தடங்களில் குறைந்தபட்ச செலவிலான பேருந்துகள் இயக்கம்.

(4) இரண்டாம் இடம்– புறநகர் வழித்தடங்களில் அதிகப்படியான பேருந்து உற்பத்தித் திறன்.

(5) இரண்டாம் இடம் – புறநகர் வழித்தடங்களில் பேருந்து உற்பத்தித் திறனில் அதிகப்படியான முன்னேற்றம்.

- இப்போக்குவரத்துக் கழகம் **2015–2016–**ஆம் ஆண்டில் போக்குவரத்தில் தேசிய அளவிலான உயரிய விருதுகளை கீழ்காணும் சிறப்புப் பிரிவுகளில் அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) பெற்றுள்ளது :-

1. “போக்குவரத்து பொதுச் சேவை–பணியிடத்தில் பாதுகாப்பு'' சிறப்பு விருது **2015** ஆகஸ்ட் **14** அன்று ரூ.**2.00** லட்சம் ரொக்கத்துடன் பெறப்பட்டது.
2. ‘‘சிறந்த தரம், வணிகம் மற்றும் தொடர்பு செயல்பாடுகள்'' சிறப்பு விருது **2016** மார்ச் **22** அன்று பெறப்பட்டது.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.



**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் ஸ்டேன்லி அணை போன்ற சுற்றுலா தலங்களுக்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- மாதேஸ்வரன் மலை, சிவாலயங்கள் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் பகுதிகளுக்கும், முருகாலயங்கள் அமைந்துள்ள காளிப்பட்டி மற்றும் கபிலர் மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### 15.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர் :

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை 44 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 3,331 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,977 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 19,647 ஆகும். இக்கழகம் சாதாரண மற்றும் விரைவுப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் அன்னூர், கொடுமுடி மற்றும் ஒண்டிப்புதூர் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் தொடங்கிவைக்கப்பட்டன.

- இக்கழகத்தில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் பொள்ளாச்சி, தாராபுரம், உடுமலைப்பேட்டை மற்றும் பள்ளிபாளையம் ஆகிய இடங்களில் உள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் பொள்ளாச்சியில் கூண்டுகட்டும் பிரிவு கூடுதலாகவும் தொடங்கப் பட்டுள்ளது.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 736 புதிய பேருந்துகள், 44 மலைப்பகுதி பேருந்துகள் மற்றும் 206 புதிய வழித்தடங்களும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.



- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2,653 ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- வால்பாறை, மருதமலை, ஊட்டி மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பர்லியார் மற்றும் ஹாசனூர் ஆகிய இடங்களில் பயண வழி உணவகங்கள் செயல்படுகின்றன.

- பண்ணாரி, காரமடை, பூண்டி, பழனி, வால்பாறை, மேட்டுப்பாளையம், குன்னூர் மற்றும் ஊட்டி போன்ற சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூரின் 4 பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**15.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்:**

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் கும்பகோணத்தில் அமைந்துள்ளது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கும்பகோணம், திருச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை **58** ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை **3,939**, வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **3,874** மற்றும் **3,671** தடங்கள் ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை **23,613** ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு மற்றும் தொடர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.



- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **1148** புதிய பேருந்துகள் மற்றும் **330** புதிய வழித்தடங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **2402** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டுகட்டும் பிரிவுகள் பொறையூர், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு புதுக்கோட்டையிலும், டயர் புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.
- இப்போக்குவரத்துக் கழகத்திற்கு ASRTU நிறுவனத்தினரால் **2014–2015 –**ஆம் ஆண்டில் புறநகர் பேருந்துகளில் டீசல் பயன்பாட்டில் அதிக அளவில் முன்னேற்றம் காட்டியதற்காக முதலிடமும் மற்றும் புறநகர் பேருந்துகளில் டயர் பயன்பாட்டில் அதிக அளவில் முன்னேற்றம் காட்டியதற்காக முதலிடமும் **21.03.2016** அன்று வழங்கப்பட்டுள்ளது.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- இக்கழகம் நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளார், சுவாமிமலை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

### 15.7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை:

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையை கண்காணிக்க மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை **39** ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை **2,640** மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **2,298** ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை **15,266** ஆகும். இக்கழகம், சாதாரண மற்றும் விரைவுப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.



- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் செக்காணூரணி, திருப்புவனம் (மடப்புரம்), லோயர் கேம்ப் (குமுளி) மற்றும் ராஜபாளையம்–II ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- இப்போக்குவரத்துக்கழகம் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் கூண்டுகட்டும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **668** புதிய பேருந்துகளும், **91** புதிய வழித்தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- இக்கழகம் **2015–இல்** மூன்று மண்டலங்களால் இணையதளம் வழியாக ETM கருவிகள் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்பொழுது, **33** பணிமனைகளில் **3,875** கருவிகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்காக நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு நாள் பயணம் செய்யும் வகையில் **விருப்பம்போல் பயணம்**

**செய்யும் திட்டத்தின்** கீழ் பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- 45 நகரப்பேருந்துகள் இரவுச் சேவை (Night Service) பேருந்துகளாக இயக்கப்படுகின்றன.
- திருவிழாக்களை முன்னிட்டு (i) வீரபாண்டி (ii) இருக்கன்குடி (iii) வேளாங்கன்னி (iv) பழனி ஆகிய இடங்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

### 15.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி:

இப்போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்து சேவையை கண்காணிக்க திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் மொத்தப் பணிமனைகளின் எண்ணிக்கை 29 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 1,943 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,801



ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 12,926 ஆகும். இப்போக்குவரத்துக்கழகம், சாதாரண, விரைவு, அதிசொகுசு மற்றும் அதிநவீன பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் சேரன்மகாதேவியில் புதிய பணிமனை தொடங்கி வைக்கப்பட்டது.
- இப்போக்குவரத்துக்கழகம் திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் கூண்டுகட்டும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 509 புதிய பேருந்துகளும், 66 புதிய வழித்தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்**

- இக்கழகம், திருச்செந்தூர், சங்கரன்கோவில், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் ஆகிய வழிபாட்டு மற்றும் சுற்றுலா தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலியின் கட்டுப்பாட்டில் உள்ள

கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறை அமைக்கப்பட்டுள்ளது.

- இரண்டு இரவுநேரப் பேருந்துச் சேவைகள் திருநெல்வேலியிலும் மற்றும் ஒரு இரவுநேரப் பேருந்து சேவை நாகர்கோவிலிலும் தினமும் இயக்கப்பட்டு வருகிறது.
- மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக 44 கூடுதல் பேருந்துகள் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவிலில் 18 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது.

## 16. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை :

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 25.03.1975 அன்று தொடங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியைப் பொதுமக்களிடமிருந்து வைப்பினை பெறுவதன் மூலம் பூர்த்தி செய்து, அரசின் வரவு செலவுத் திட்டத்தைச் சாராமல் இருக்கும்பொருட்டு துவக்கப்பட்டது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்துள்ளது.



### 16.1 வைப்பீடுகள்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அரசின் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பொதுமக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வருகிறது. 31.03.2016 அன்றுள்ளபடி மொத்த வைப்புத்தொகை ரூபாய் 2,148.90 கோடியாகும்.

### 16.2 கடன்கள்

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு முதல் வழங்கிய கடனுதவியால் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 47,680 (31.03.2016 வரை) புதிய பேருந்துகளை வாங்கியுள்ளன. மேலும், இந்நிறுவனம் துவக்கப்பட்டதிலிருந்து 31.03.2016 வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.2,452.26 கோடிக்கு கடனுதவி அளித்துள்ளது.

### 16.3 2016–17–ஆம் ஆண்டின் திட்டங்கள்

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் 2016–17–ஆம் ஆண்டில், 176 புதிய பேருந்துகள் வாங்க நிதியுதவி அளிக்கவும், மோட்டார் வாகன வரி, ஊக்கத்தொகை மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 17. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, சென்னை:

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, நிர்வாக இயக்குநர் தலைமையின்கீழ் 1984–ஆம் ஆண்டு தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடனும் (Authorized share Capital), ரூ.10 இலட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் (Paid-up share Capital) தொடங்கப்பட்டு சாலைப் போக்குவரத்தில் அறிவுரை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இப்பணிக்குழு, தொடங்கிய காலத்திலிருந்து தன்னுடைய செயல்பாடுகளை வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தி, தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், போக்குவரத்து பணி, நவீன தொழில்நுட்பப் போக்குவரத்து முறைமை ஆகிய பல்வேறு துறைகளுக்கும் அனுபவம் பெற்ற ஆலோசகர்களின் மூலம் உரிய பிரிவுகளில் சேவைகளை வழங்கிவருகிறது. மேலும், பணிகளை முடிப்பதற்கு வல்லுநர்களின் சேவைகளை தேவைக்கேற்பப் பயன்படுத்தி வருகிறது.



### 17.1 கணினி, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிப் பிரிவு:

இப்பணிக்குழு, தற்போது சென்னையில் பேருந்து விரைவுப் போக்குவரத்து திட்டத்தை செயற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் கையடக்க மின்னணு பயணச்சீட்டுக் கருவி மற்றும் அதன் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மின்னணு பயண அட்டைத் திட்டத்தினை சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் செயல்படுத்துதல் ஆகிய திட்டங்களில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்காக கணினி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் திட்டம், சென்னை கோயம்பேட்டில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தில் உதவி மையம் இயக்குதல், இயக்க இயலாத பேருந்துகளை இணையதளம் வழிச் செயல்பாடு மூலம் பொது ஏலத்திற்கு விடுவது, தமிழ்நாடு அரசு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறைக்கான இணையதளப் பணியை முடித்தல், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கான இணையதளம் உருவாக்குதல், மின் ஏலத்திற்கான திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோருதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 17.2 எதிர்கால திட்டங்கள் :

தமிழ்நாடு அரசு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறைக்காக இணையதளம் வழியாகப் பழைய வாகனங்களைப் பொது ஏலத்திற்கு விடுவது, மாநகர் பேருந்து நகர்வினை புவி இருப்பிடமுறைமை மற்றும் சிசிடிவி மூலம் கண்காணித்தல் அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் புறப்பாடு / வருகை முறையினை துரித முறை செய்கை மூலம் கண்காணித்தல் போன்ற பணிகளுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் துறைகளில் உள்ள பழைய பதிவேடுகளை மென்பொருள் மூலம் பாதுகாத்தல், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையம், தமிழ்நாடு இணையவழி பல்கலைக்கழகம், சென்னை, ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் உள்ள கணினிகளை வருடாந்திர ஒப்பந்தத்தின் மூலம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கும் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு கருத்துருக்களை சமர்பித்துள்ளது.

## 18. சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை :

சாலைப் போக்குவரத்து நிறுவனம் இந்தியச் சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860–இன் கீழ் பதிவு செய்யப்பட்டு 1976–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சாலைப் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுப் பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப்



பணிகள், பேருந்து அமைப்பு மேலாண்மை, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை இந்நிறுவனம் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்களின் மேலாளர் நிலையில் உள்ள இயக்குநரின் தலைமையின் கீழ் சென்னையில் உள்ள தரமணியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பின்வரும் அலுவலர்கள் / பணியாளர்கள் பணிபுரிகின்றனர் :

| வ. எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இணை இயக்குநர் (தொழில்நுட்பம்) | 1 |
| 2 | முதுநிலைத் துணை மேலாளர் (தொழில்நுட்பம்) | 1 |
| 3 | முதுநிலைத் துணை மேலாளர் (கணக்கு) | 1 |
| 4 | துணை இயக்குநர் | 6 |
| 5 | உதவி இயக்குநர் | 13 |
| 6 | உதவி இயக்குநர் (கணக்கு) | 3 |
| 7 | உதவிப் பொறியாளர் | 15 |
| 8 | நிர்வாகப் பணியாளர்கள் | 960 |

## சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் பணிகள்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகங்களில் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை நடத்தப்பட்ட **1,776** புத்தாக்கப் பயிற்சிகளில் மொத்தம் **37,968** போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்நிறுவனம், அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கியப் பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், டயர், முழுவதுமாகக் கட்டப்பட்ட பேருந்து, பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்கான ஒரு முகவராக செயல்பட்டு வருகிறது. மேலும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான மேலாளர்கள் மற்றும் இதர பிரிவினர்களுக்கான தேர்வுகள் ஆண்டுதோறும் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகிறது.



இந்நிறுவனத்தின் பரிசோதனைக் கூடத்தில் **66** மோட்டார் வாகன உதரிபாகங்கள் பரிசோதனை செய்யும் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை, **5,879** மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டன. சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு இதுவரை **522** ஆராய்ச்சி அறிக்கைகள், **29** ஆலோசனை அறிக்கைகள், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் தொழில்நுட்பக் கையேடு ஆகியவற்றைப் போக்குவரத்துக் கழகங்களுக்காக வெளியிட்டுள்ளது.

### 18.1 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் / கல்வி நிறுவனங்கள்:

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் நிர்வாக அமைப்பின்கீழ், கீழ்க்கண்ட ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் / கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:

- ❖ கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம்.
- ❖ இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம்.
- ❖ சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரி, ஈரோடு.
- ❖ சாலைப் போக்குவரத்து நிறுவனம்–பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை.

❖ செவிலியர் பயிற்சிப் பள்ளி, பெருந்துறை

❖ சாலைப் போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்பக் கல்லூரி, குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி.

**18.1.1 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம்.**

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் கும்மிடிப்பூண்டி, திருச்சி ஆகியவை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் **15** மையங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன. **2015–16–**ஆம் ஆண்டு வரை மேற்கண்ட **17** பயிற்சி மையங்களில் **54,355** நபர்கள் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

**18.1.2 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம்.**

இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் சென்னை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 4 வாரம் ஓட்டுநர் பயிற்சி மற்றும் **6** வாரம் ஓட்டுநர் பயிற்சி என இரண்டு வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. **2015–16–**ஆம் ஆண்டில் பயிற்சி பெற்று பயனடைந்தவர்களின் விவரம் பின்வருமாறு :-



| வ. எண். | பயிற்சித் திட்டம் | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 வாரம் பயிற்சி | 2362 |
| 2 | 6 வாரம் பயிற்சி | 277 |

**18.1.3 சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரி, ஈரோடு.**

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக **1984–**ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் **528** மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை **8,425** நபர்கள் இளநிலைப் பொறியியலிலும் (பி.இ), **146** நபர்கள் கட்டடவியல் முதுநிலைப் பொறியியலிலும் (எம்.இ), 18 நபர்கள் வெப்பவியல் முதுநிலை பொறியியலிலும், 824 நபர்கள் கணினி பயன்பாட்டியலில் முதுகலை (எம்.சி.ஏ) பட்டங்களும் பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தால் வழங்கப்படும் வகுப்புகள் மற்றும் அவற்றில் பயிலும் மாணவர்களின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண். | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாண்டு முதல் நான்காம் ஆண்டு முடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) பட்டப் படிப்புகள் | | | | | |
| 1. | தானியியங்கி பொறியியல் | 1984 | 60 | 55 | 264 |
| 2. | இயந்திர பொறியியல் | 1984 | 60 | 57 | 269 |
| 3. | கட்டட கலை பொறியியல் | 1984 | 60 | 52 | 259 |
| 4. | கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 1984 | 60 | 56 | 264 |
| 5. | மின்னணுவியல் & தொலை தொடர்பு பொறியியல் | 1992 | 60 | 52 | 258 |
| 6. | மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் | 1992 | 60 | 58 | 268 |
| 7. | தகவல் தொழில்நுட்ப பொறியியல் | 2002 | 60 | 56 | 241 |
| (ஆ) முதுகலை பட்ட மேற்படிப்புகள் | | | | | |
| 8. | கணினி பயன்பாட்டில் முதுகலை பட்டம் (MCA) | 1996–97 | 60 | 2 | 67 |
| 9. | முதுகலை பட்டம் (கட்டடவியல்) | 2003–04 | 24 | 21 | 45 |
| 10 | முதுகலை பட்டம் (கணினி அறிவியல்) | 2014–15 | 24 | 6 | 27 |
| மொத்தம் | | | 528 | 415 | 1962 |



**18.1.4 சாலைப் போக்குவரத்து நிறுவனம்– பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை.**

அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகளின் நலன்களுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளவும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை **1986** முதல் இந்நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் ஆண்டுதோறும் **60** மாணவ, மாணவியர்கள் மருத்துவ பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப் படுகின்றனர். இதுவரை இம்மருத்துவக் கல்லூரி **1,427** மருத்துவர்களை உருவாக்கியுள்ளது.

**18.1.5 செவிலியர் பயிற்சிப் பள்ளி, பெருந்துறை**

இம்மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பள்ளி **2008–09**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் நடத்தப்படும் செவிலியர் பட்டயப் படிப்பில் ஆண்டுதோறும் **20** மாணவியர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதுவரை **94** செவிலியர்கள் இப்பள்ளியிலிருந்து தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**18.1.6 சாலைப் போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்பக் கல்லூரி, குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி.**

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று பல்தொழில்நுட்பப் பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில்

1992–93–ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று தொழில்நுட்பப் பயிலகங்களிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவ, மாணவியர்கள் நான்கு பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறனர். இம்மூன்று தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாளது வரை 8,430 மாணவ, மாணவியர் பட்டயங்கள் பெற்றுள்ளனர்.

இந்நிறுவனத்தால் நடத்தப்படும் கல்லூரிகளில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தற்போது நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி– மருத்துவ பட்டப்படிப்பு | 60 | 39 (65%) | 21 (35%) |
| 2. | சாபோநி செவிலியர் பட்டயப் பள்ளி | 20 | – | 20 |
| 3. | பொறியியல் கல்லூரி | | | |
| | (அ) இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 420 | 273 (65%) | 147 (35%) |
| | (ஆ) முதுகலைப் பட்டம் கட்டடவியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| | (இ) கணினி பொறியியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| | (ஈ) கணினி பயன்பாடு (MCA) | 60 | 30 (50%) | 30 (50%) |
| 4. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 700 | 350 (50%) | 350 (50%) |



சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களுக்கான மூலதனச் செலவினங்களை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொள்கின்றன. சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்கான தொடர் செலவினங்கள் போக்குவரத்துக் கழகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்களை வழங்குபவர்களிடமிருந்து சிறப்பு நிர்வாகத் தள்ளுபடி வசூல் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது. கல்வி நிறுவனங்களின் அன்றாட செலவினங்களை அனைத்து போக்குவரத்து கழகங்களிலும் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் வட்டியில்லாக் கடன் தொகை வைப்புநிதியிலிருந்து வரும் வட்டி வருமானம், கல்விக் கட்டணம், மருத்துவமனை வருமானம் ஆகியவற்றின் மூலம் ஈடு செய்யப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதனைச் சார்ந்த அலகுகளில் பல்வேறு விதமான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.786.47 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இதில் 2015–16–ஆம் ஆண்டில் மேற்கண்ட பயிற்சியினைச் சிறப்பாக நிறைவு செய்தமைக்காக ரூ.680.28 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

மேலும் 2016–17–ஆம் ஆண்டில் ரூ.1084.94 இலட்சம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறப்புப் பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**19. மோட்டார் வாகன பராமரிப்புத் துறை:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறை வாகனங்களின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசுத் தானியங்கிப் பணிமனைகளை, இயக்குநரைத் துறைத் தலைவராகக் கொண்டு, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது.

பொதுமேலாளர் அலுவலகம், சென்னை வேளச்சேரியில் மைய தானியங்கிப் பணிமனையிலும், மண்டலத் துணை இயக்குநர்கள் அலுவலகங்கள் திருச்சி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன. மற்ற சார்நிலை அலுவலகங்கள் கோவை, வேலூர், தருமபுரி, நாகர்கோவில், தூத்துக்குடி, விழுப்புரம், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், உதகமண்டலம், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் தானியங்கி பொறியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.



சுமார் 21,063–க்கும் மேற்பட்ட அரசுத்துறை வாகனங்களைப் பராமரித்து வரும் இத்துறையின் கட்டுப்பாட்டில், முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களின் வாகனங்களுக்கு ஏற்படும் சிறுசிறு பழுதுகளை நீக்க மற்றும் சுத்திகரிப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக, சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் சுத்திகரிப்புப் பணி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**20. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம் (CUMTA):**

சென்னை மாநகருக்காக ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து குறித்த அனைத்து அம்சங்களையும் கண்காணிக்க, ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தை உருவாக்குகின்ற அடிப்படைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள பல்வேறு பெரிய போக்குவரத்து முகமைகளான அதிவேக மக்கள் திரள் போக்குவரத்து (MRTS), செயல்படுத்தப்படவுள்ள மோனோ இரயில் திட்டம், சென்னை மெட்ரோ இரயில், மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகராட்சி, சென்னை

போக்குவரத்துக் காவல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றிற்கு இடையே மேலான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதே சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையத்தின் (CUMTA) முக்கிய நோக்கமாகும்.

**21. மோனோ இரயில் திட்டம்:**

சென்னை மாநகரில் உள்ள பல்வேறு வகை போக்குவரத்து பயன்பாட்டில் 27 விழுக்காடு மக்கள் மட்டுமே பொதுப் போக்குவரத்து வசதிகளை பயன்படுத்துகின்றனர். இது 2026–ஆம் ஆண்டில் 46 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டும். தமிழக அரசு மோனோ இரயில் திட்டத்தினை சென்னை மாநகரில் தற்போதுள்ள மற்றும் வரவிருக்கின்ற போக்குவரத்து வசதிகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த முடிவெடுத்துள்ளது.

தமிழக அரசு சென்னை மோனோ இரயில் திட்டத்தை 43.48 கி.மீ. (தோராயமாக) தொலைதூரத்திற்கு கீழ்க்கண்ட இரு திட்டங்களாகச் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது.



**பூந்தமல்லி முதல் கத்திப்பாரா வரை இணைப்புடன் போரூரிலிருந்து வடபழனி வரை (20.68 கி.மீ):**

இத்திட்டம், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், ரூ.3,267 கோடி திட்ட மதிப்பில், வடிவமைத்து, நிதி திரட்டி, கட்டமைத்து, பராமரித்து, ஒப்படைக்கும் (Design, Build, Finance, Operate and Transfer) அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது.

**வண்டலூர் முதல் வேளச்சேரி வரை (22.80 கி.மீ)**

இத்திட்டத்தை ரூ.3135.63 கோடி திட்ட மதிப்பில், பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**22. துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு:**

போக்குவரத்துத் துறையானது, தென்னக இரயில்வே துறை, சிவில் விமானப் போக்குவரத்துத்துறை, தபால் துறை மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகிய மத்திய அரசுத்துறைகளின் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புத் துறையாக விளங்குகிறது.

1. மேற்கண்ட துறைகளிடமிருந்து பெறப்படுகின்ற நிலத்தேவை தொடர்பான கருத்துருக்கள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரைக்காக அனுப்பப்படும்.

2. கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் உரிய துறைகளிடம் அவைகளின் திட்டங்களைத் தொடங்குவதற்கு ஒப்படைக்கப்படுகின்றன.

**23. விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல்:**

இந்திய விமான நிலைய ஆணையம், விரிவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் சென்னை விமான நிலையம் மற்றும் பெருநகர் அல்லாத விமான நிலையங்களான (Non-Metro Airports) மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய விமான நிலையங்களை மேம்படுத்த திட்டம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலங்களை விமான நிலையங்கள் ஆணையத்திடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் வழங்க தமிழக அரசால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



**24. முடிவுரை:**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆசியுடனும், வழிகாட்டுதலுடனும், போக்குவரத்துத் துறையால் தற்போது வழங்கப்படும் சேவையை நவீனமாகவும், வசதியாகவும், மதிப்புமிக்கதாகவும், பயணிகள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து வழங்க இத்துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. மேலும், பெருகிவரும் பயணிகளின் எதிர்பார்ப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை நிறைவு செய்யும் வகையில் வசதிகளை அதிகரிப்பதிலும், புதிய திட்டங்களைச் சிந்தித்து வடிவமைப்பதிலும் இத்துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

<u>இணைப்பு</u>

**மானியக் கோரிக்கை எண். 48**

**போக்குவரத்துத் துறை**

**வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2016–2017**

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 746,54,02 | 353,30,80 | 125,00,02 | 1,224,84,84 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 70,23,32 | 1 | - | 70,23,33 |
| | **மொத்தம்** | **816,77,34** | **353,30,81** | **125,00,02** | **1,295,08,17** |